பிரிவு 2 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(6) அறிவிப்பு.

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, விவாதத்தை நாளை வைத்துக் கொள்ளலாம்; பலரும் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் பல்கலைக் கழகம் என்பதால் எல்லோரும் அனேகமாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்காகத்தான் இப்போதே முடித்து விடலாம் என்று எண்ணினேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, எல்லோரும் ஏற்றுக் கொண்டாலும் இது குறித்துக் கருத்துக்களைச் சொல்ல வேண்டி இருப்பதால் நாளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

---

*1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே இதை இப்போது எடுத்துக்கொள்ளாமல் நாளைக்கு எடுத்துக் கொள்வதுதான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (17-2-1982) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.
—எதுவுமில்லை—

ஆ, அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

23. 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவைக் குற்றயியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1982).

24. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1982).

25. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன வடிவு எண். 5/1982).

26. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) ட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை ட்டமுன்வடிவு எண். 6/1982).